அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நமது பள்ளியில் 1992-93-ஆம் ஆண்டில் மேனிலைக் கல்வியில் தொழிற்கல்விப் பிரிவில் மைய அரசின் அனுமதியின் பேரில் அலுவலக மேலாண்மை தொழிற்கல்விப் பாடம் தொடங்கப்பட்டுள்ளது.

1994-95 கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் தனித் தனியே ஓய்வறைகள் அமைக்கப்பட்டு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உதவித் தலைமை ஆசிரியர்கள் அறையும், தேசிய மாணவர் படை, சாலைப் பாதுகாப்புப்படை, சாரண சாரணியர், நாட்டு நலப்பணித்திட்டம் ஆகிய அலுவலகங்களுக்குத் தனித்தனியே அறைகளும் ஏற்படுத்தப்பட்டன. தையல் பயிற்சிக்கென தனியாக வகுப்பறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்கான செலவு சுமார் ரூபாய் மூன்று லட்சங்களாகும்.

பள்ளி நூலகம், அறிவியல் ஆய்வு கூடத்தின் மேற்புறத்தில் விரிவாக மாற்றி அமைக்கப்பட்டது. கூடுதல் இருக்கை வசதிகளும், கூடுதல் புத்தக அலமாரிகளும் அமைக்கப்பட்டன.1995-1996 கல்வி ஆண்டில் அனைத்து வகுப்புகளுக்கும் கூடுதல் மின் விசிறிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கேற்ப மாணவர்கள் உடல்நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நமது பள்ளியில் உள்ள அனைத்துக் கழிப்பறைகளும் சீரிய முறையில் சலவைக்கற்களும், சலவைச்சதுர ஓடுகளும் பதிக்கப்பட்டு பீங்கான் கோப்பைகள் தனித்தனியாகத் தண்ணீர்க் குழாய் வசதியுடன் மிக அதிக எண்ணிக்கையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்டுள்ள

சுகாதார வசதியானது சென்னை மாநகரில் உள்ள மிகப்பெரிய புகழ்பெற்ற பள்ளிகளுக்குச் சமமாக உள்ளது எனப் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைமையாசிரியரின் அறையிலிருந்தே ஒவ்வொரு வகுப்பறையுடனும் தனித்தனியாகவும், மொத்தமாகவும் ஒலித்தொடர்பு கொள்ளும் வகையில் பள்ளி வளாகம் முழுவதும் புதிய உள்வளாக ஒலித்தொடர்புக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

2000-2001 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 99.5 சதவீதம் தேர்ச்சி பெற்று சிறப்புப் பெற்றது.

2002-2003 ஆம் கல்வியாண்டில் பள்ளி வளாகத்தில் பெருந்தலைவர் கு. காமராஜர் பெயரில் திறந்தவெளிக் கலையரங்கம் கட்டி முடிக்கப்பட்டது.

2003-2004 மற்றும் 2004-2005 ஆம் கல்வியாண்டில் பள்ளி வளாகத்திலுள்ள பெருந்தலைவர் காமராஜர் திறந்தவெளிக் கலையரங்கத்தின் மேல் கணிப்பொறிச் செயல்முறைக்கு என இரண்டு மையங்களும், வகுப்பறைக்கு ஒரு அறையும் அமைக்கப்பட்டன.

இது வரையிலும் ஒரே ஆய்வுக்கூடத்தில் இயற்பியல், உயிரியல் மற்றும் வேதியியல் பாட ஆய்வுக்கூடம் நடைபெற்று வந்தது. ஒவ்வொரு பாடத்திற்கும்தனித் தனி ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டால் அது மாணவர்களுக்கு நன்மை பயக்கும் எனக்கருதி 2004-2005ம் கல்வி ஆண்டில் ஆய்வுக்கூட வளாக முதல் தளத்தில் இயற்பியல் ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டது.

2005-2006ம் கல்வி ஆண்டில் கணிப்பொறி மைய வளாகம் மாற்றிச்

செய்யப்பட்டது. மேலும் வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வுக்கூடங்கள் நவீன காலத்திற்கு ஏற்பச் சீர்செய்யப்பட்டு தனித் தனி ஆய்வுக்கூடங்களாக மாற்றப்பட்டன.

2007-2008-ல் பொன்விழா காண்பதனை முன்னிட்டு, பள்ளிப் பொன்விழா மாளிகை கட்ட 03.12.2005-ல் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டி முடிக்கபெற்று 22.02.2007ல் தமிழக செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மாண்புமிகு பரிதிஇளம்வழுதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2008-2009- பள்ளியின் பொன்விழா ஆண்டையொட்டி சென்னைக் கல்வி மாவட்டத்துக்குட்பட்ட பள்ளிகளுக்கிடையே கைப்பந்தாட்டம், எறி பந்தாட்டம், சதுரங்கம் ஆகிய விளையாட்டுப் போட்டிகளை நவம்பர் 2008-ல் நம் பள்ளி சிறப்பாக நடத்தி பரிசுகள் வழங்கியது. 20.02.2009-ல் நடைபெற்ற நமது ஆரம்ப & மேனிலைப்பள்ளியின் பொன்விழா மற்றும் காமராஜரின் 107-வது பிறந்த தினவிழாவில் மத்திய இணை அமைச்சர் (சமூக நீதி அதிகாரப் பங்களிப்பு) மாண்புமிகு திரு.து.நெப்போலியன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பள்ளியின் யானைச சின்னத்திற்கான நினைவுத்தூணை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்த விழாவின் அடுத்த நாள் விழா நிகழ்ச்சியில் மதுரை நாடார் மகாஜன சங்கப் பொதுச் செயலாளர் திரு.ஜி.கரிக்கோல்ராஜ் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பள்ளியின் பொன்விழா மலரை வெளியிட, ஆச்சி மசாலா அதிபர் திரு.A.பத்மசிங் ஐசக் அவர்கள் விழா மலரைப் பெற்றுக் கொண்டார்கள். திரு.W.P.A.S.பாண்டியநாதன் பாஸ்கரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2009-2010- கல்வியாண்டில் மாணவ.மாணவிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் பொருட்டு, அரிமா சங்க உதவியுடன் நமது பள்ளியில் குடிநீரைச் சுத்திகரிக்கும் இயந்திரம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில்

நிறுவப்பட்டது. 16.11.2009 அன்று சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் திரு.பி.ஏ.நரேஸ் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு சுத்தமான குடிநீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது.

2010-2011 கல்வியாண்டில் உடற்கல்வித்துறையில் சென்னை மாவட்ட மகளிர் விளையாட்டுக் கழகம் சார்பாக நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளை நமது பள்ளி முன்னின்று நடத்தியது. போட்டிகளின் நிறைவு விழா சென்னை நேரு விளையாட்டரங்கில் 19.11.2010 அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று காலையில் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் திரு.தர்மராஜேந்திரன் அவர்கள் வருகை தந்து விழாவைத் துவக்கி வைத்தார். மாலையில் சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்ரமணியம் அவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

2011-2012 - கல்வியாண்டில் பள்ளியின் சார்பாகவும், சங்கத்தின் சார்பாகவும் 64-மேஜை, நாற்காலிகள் செய்யப்பட்டன. இவ்வாண்டு 12-ம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள் அனைவருக்கும் தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டது.

2012-2013-இந்தக் கல்வியாண்டில் நமது பள்ளியின் ஆலோசகர் திரு.T.சுடலைமணி நாடார் அவர்களும், அவரது துணைவியார் திருமதி. S.கனகமணி அவர்களும் மற்றும் அன்னாரின் மகன்கள், மருமகள்கள்,மகள் எல்லோரும் சேர்ந்து நமது பள்ளிக்கு மின்ஒளி வழங்க, ரூபாய் 4,40,000 (நான்கு லட்சத்து நாற்பதாயிரம்) செலவில் 62.5 K.V. மின் உற்பத்தி இயந்திரத்தை (ஜெனரேட்டர்)வழங்கியுள்ளார்கள்.

2014-2015-ஆம் ஆண்டு 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகள் அனைவருக்கும் தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டது. இக்கல்வியாண்டில் நமது பள்ளியில் அனைத்து வகுப்பறைகளுக்கும் வெள்ளையடிக்கப்பட்டு, கரும்பலகைகள் அனைத்தும் கல்லூரித் தரத்திற்குச் சமமான வகையில் நவீனமயமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

2014-2015-ஆம் கல்வியாண்டில் பள்ளியின் மேற்குபுற ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் ரூபாய் 4,50,000 செலவில் சீர் செய்யப்பட்டது.

பள்ளி விளையாட்டு மைதானம் ரூபாய் 1,50,000 செலவில் மணல் நிரப்பி பராமரிக்கப்பட்டது. மேலும் பள்ளி வளாகத்தில் ரூபாய் 3,00,000 செலவில் 32 இடங்களில் மாணவர்களின் நலனுக்காக கண்காணிப்பு கேமரா பொருத்தப் பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 1,50,000 செலவில் நிறுவப்பட்ட **(RO.PLANT)**மூலம் ஆஸ்மாஸீஸ் முறையில் சுத்திகரிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்த அயன்புரம் வட்டத்தில் மிகச் சிறந்த முறையில் கல்வி பணியாற்றி வரும் அயன்புரம் நாடார் உறவின்முறைச் சங்கம் சாதி, மத, இன வேறுபாடுகளின்றி அனைத்துச் சமுகத்தினரின் கல்வி மேம்பாட்டிற்கெனவே தன்னை அர்பணித்து, அயராது பாடுபட்டு மிகச் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

